DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai.
DVC . No. 2 of 2024
List of witness/Prosecution witness : DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. M. ரமேஷ் | Caste | : | |
| Fathers Name | : | திரு. முத்து | Calling | : | |
| Village | : | திருகண்டலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 51 |

(Respondent called present)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.04.2025.

முதல் விசாரணை தொடர்ச்சி நேரம்:- 11.55

1. மனுதாரர் பெயரில் உள்ள வங்கி கணக்கு எண் 852916148 அதன் வரவுசெலவு கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.(மனுதாரர் தரப்பில் இவ் ஆவணம் 2021ம் ஆண்டிற்கு உரியது அதனால் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனையுடன் ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.)

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

2. நான் தாக்கல் செய்துள்ள எதிருரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் நான் பணி செய்யும் விவரம் மற்றும் என்னுடைய ஊதியம் குறித்து குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

3. என்ன காரணத்திற்காக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அன்னைக்கு குறிப்பிட்டு விட்டேன். சாட்சி மீண்டும் மாற்றி மனுவில் சொல்லவில்லை ஆனால் வாய்மொழியாக கூறினேன் என்றார். நான் விவரம் கூறவேண்டும் என்ற அவசியம் ஏற்படவில்லை அதனால் குறிப்பிடவில்லை.

4. எனது ஊரில் வசிக்கும் அனைத்து நபரின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

5. மனுதாரர் எங்களது கிராமத்தில் உள்ளவர்களிடம் கடன் வாங்கியதாக நான் குறிப்பிட்டு இருந்தேன் என்றாலும், அவர் யாரிடம் எவ்வளவு தொகை கடன் வாங்கினார் என்ற விவரம் எதாவது குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் நான் பெயர் குறிப்பிடவில்லை ஆனால் வீட்டின் அருகே வந்து சண்டை போட்டார்கள். வீட்டின் அருகில் வந்து சண்டை போட்ட நபரின் விவவரம் கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

6. எவ்வளவு தொகை கடன் வாங்கினார்கள் என்ற விவரம் சொல்லியுள்ளேனா

என்றால் இல்லை.

7. மனுதாரர் கடன் வாங்கி கொடுகக்வில்லை என்று யாராவது மனுதாராருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்களா என்றால் இல்லை.

8. மனுதாரர் கடன் வாங்கியது குறித்து யாராவது என்னிடம் வந்து தனது மனைவி கடன் வாங்கிவிட்டார் அவர் கடன் கொடுக்கவில்லை அதனால் நீங்கள் அந்த தொகை கொடுங்கள் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் புகார் கொடுக்கவில்லை ஆனால் என்னை கேட்டார்கள்.

9. ரேவதி என்பவரை முதலில் எனக்கு தெரியுமா அல்லது மனுதாராருக்கு தெரியுமா என்றால் எனக்கு தான் தெரியும். அவர் என்ன வேலை செய்து வருகின்றார்கள் என்றால் ஊராட்சி செயலாளராக பணி புரிந்து வருகின்றார்.

10. நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் 16வது பத்தியில் சொல்லியுள்ள விவரங்கள் கிரைய ஆவணத்திற்கு பின்னிட்டு எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் எனக்கும் ரேவதி என்பவருக்கும் தவறான உறவு இருந்தது என்று மனுதாரர் புகார் அளித்து இருந்தார், அதன்பின்னிட்டு தான் எனக்கு தெரியும்.

11. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள தேதி 31.01.2023 என்று உள்ளது என்றால் சரிதான்.

12. மேற்படி விசாரணை பின்னிட்டு தான் பிழைத்திருத்தல் பத்திரம் என்னால் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

13. என்னிடம் காட்பப்படும் ம.சா.ஆ 2 ஆவணத்தில் ரேவதி என்பவரின் கணவர் பெயர் என்று எந்த பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு M. ரமேஷ் என்று உள்ளது என்று சாட்சியம் அளித்தார். மேற்படி ஆவணத்தில் குழந்தையின் முதல் எழுத்து என்னவாக உள்ளது என்றால் R என்று உள்ளது.

14. இந்த ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆதார் அட்டையான திருமதி ரேவதியின் கணவர் பெயர் என்ன என்று உள்ளது என்றால் ரமேஷ் என்று உள்ளது ஊர் பெயர் பெரியபாளையம் என்று உள்ளது.

15. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னால் திருமதி ரேவதி அவர்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பிழைத்திருத்தல் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் மனுதாரரின் தரப்பின் குறுக்கு விசாரணையின் போது ம.சா.ஆ.5 மேற்படி ஆவணத்தில் வானதி என்பவரது பெயருக்கு முன்பாக உள்ள இனிசில் R என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மதனகோபால் என்று உள்ளது அவர் யார் என்றால் ரேவதி அவரின் தந்தை.

16. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 2 ஆவணத்தில் உள்ள ஆதார் அட்டையில்

உள்ள முகவரி மற்றும் ம.சா.ஆ.5 உள்ள ஆதார் அட்டையின் முகவரி இரண்டும் வெவ்வேறானவை என்றால் சரிதான்.

17. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் பத்தி 10ல் உள்ள சங்கதிகள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது வேலையான வழக்கறிஞரை பார்க்கும்போது எனக்கு தெரியவந்தது. எந்த வழக்கறிஞரை பார்க்கும்போது தெரியவந்தது என்றால் திரு.முனுசாமி மற்றும் திரு.பாண்டி அவர்களை பார்க்கும்போது தெரியவந்தது.

18. அசல் வழக்கு எண் 32-2022 உள்ள வழக்கறிஞரும் இந்த வழக்கில் உள்ள வழக்கறிஞரும் இருவரும் ஒருவரே என்றால் வெவ்வெறு வழக்கறிஞர். சாட்சி மீண்டும் மாற்றி இருவரும் ஒரே வழக்கிறஞர் என்று கூறினார்.

19. ரேவதிக்கு விற்பனை செய்த சொத்து இல்லாமல் வேறு எந்த சொத்தும் எனது பெயரில் இல்லை என்றால் சரிதான்.

20. என்ன பரிகாரம் கேட்டு ரேவதி வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

21. மனுதாராருக்கு பராமரிப்பு செய்வதற்கு எதெவாது தொகை கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக 25.04.2025 அன்று ஒத்திவைக்கப்படுகின்றது.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 12.45